[1982 மார்ச் 5

குற்றவியல் நீதிமன்றங்களில் பின்பற்றப்பெறும் நடைமுறைகள்.

* வினா எண் 369—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் , மாண்புமிகு கூட்டுறவு ரிசட்ட அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் குற்றவியல் வழக்குகளில் குற்றவாளிக்கு தண்டனையுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கக் கோரும் நடைமுறை விசாரணை குற்றவியல் நீதிமன்றங்களிலேயே வழங்கும் முறை நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) குற்றவியல் குற்றங்களில் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு நீதிமன்றம், தன் விருப்பப்படி, நட்ட ஈடு கொடுக்கவும், நட்ட ஈடாக கொடுக்கப்பட வேண்டுமென்ற தொகை, நீதிமன்றங்களிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று குற்றவியல் நடைமுறைக்கோவையின் பிரிவு 357 வழிவகை செய்கிறது. இம்முறை தமிழகமெங்குமுள்ள அனைத்து குற்றவியல் நீதிமன்றங்களாலும் பின்பற்றப்படுகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தில் வழிவகை இருப்பதாக அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படி வழிவகைகள் இருந்தாலும், அவைகள் நடைமுறையில் சாத்தியமில்லை. காரணம், தண்டனை மற்றும் நஷ்ட ஈடு, அபராதம் விதிக்கப்பட்டால், குற்றவாளிகள் நஷ்ட ஈட்டைக் கொடுக்காமல், அதற்காக விதிக்கப்படும் கூடுதல் தண்டனையை தண்டனையோடு சேர்த்து அனுபவிக்கின்ற காரணத்தினால், பாதிக்கப்படுகின்றவர்களுக்கு நேரடியாக பலன் கிடைப்பதில்லை. ஆகவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக நஷ்ட ஈடு அல்லது உதவித் தொகை பெறுவதற்கு சட்டமாற்றத்திற்கான வழிவகை செய்யப்படுமா என்பதோடு, இதுவரை அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கு மன்றங்களில் நஷ்ட ஈடாக எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தண்டனை என்றும், அபராதம் என்றும் இரண்டும் இருக்கும்போது, பெரும்பாலோர் அபராதத்தைக் கட்டி விடுகிறார்கள் ; தண்டனையை அனுபவிப்ப

தில்லை. சில குற்றவாளிகள் சில சிறு குற்றங்களுக்காக, நியூசென்ஸ் கேஸ் போன்றவற்றிற்கு, ஏழைகளாக இருந்து பாதிக்கப்பட்டால், 5, 10 அல்லது 15 தினங்கள் அபராதம் கட்டாமல், சிறையிலே இருந்துவிடுகிறார்கள். நீதி மன்றங்களில் பல கட்டங்களில் இழைப்பைத் தராமல் நஷ்ட ஈட்டைத் தராமல் இருக்கிறார்கள். அது மிகவும் நீண்ட பட்டியலாக இருக்கிறது. வழக்கு மன்றங்களில் செலவிட்ட தொகையைக் கொடுக்க வேண்டும் என்றும், குற்ற வாளிகளுக்கு இழப்பு ஏற்பட்டால், அதையும் கொடுக்க வேண்டுமென்றும் சிவில் நீதிமன்றத்தில் கிட்டத்தட்ட 7, 8 விதிகளின் அடிப்படையில் இழப் பீட்டுத் தொகை தரப்படுகிறது; தரப்பட்டும் வருகிறது. எத்தனை பேர் களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் தற்போது இல்லை. உயர்நீதி மன்றத்தில் கேட்டபோது, உடனடியாக தர இயலாது, சற்று அவகாசம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், யாருக்கு அப்படி இழப்பீடு கொடுக்கவில்லையோ, அவர்கள் எந்த நேரத்தில் மனு செய்தாலும் கொடுப்ப தற்கு வழிவகை இருக்கிறது.

அரசு அறிவித்த கூட்டுறவுக் கடன் சலுகைகள்.

*வினா எண் 370—திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு அரசு அறிவித்த கூட்டுறவுக்கடன் சலுகைகளைப் பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் கடன் வகை வாரியாக விவசாயிகளின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) ஒரு விவர அறிக்கை * அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணம் என்பது கடன் பெற்ற காலத்திலிருந்து நில அளவை வைத்துக்கொண்டு, கடன் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளதா? அல்லது தற்போதுள்ள நிலையில் கடன் அளிக்கப்படுகிறதா?

* 362—363ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.